பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 15] சென்னை: வைகாசி 10 (23—5—68) வியாழன் ★ வெளியூர்: வைகாசி 11 (24—5—68) வெள்ளி [இதழ்: 284

## முதல்வரின் ஆசை!

சண்டிகார், மே 22—

"உண்மையிலேயே என் மனம் தூய - திறமையான நிர்வாகத்தை நாடுகிறது; இந்தக் குறிக்கோளை எய்துவதில் அரசின் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளோ பிறரோ நேரிடையாகவோ மறைமுகமாகவோ தலையிடுவதைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டேன்"

என்று, அரியானாவின் மூன்றுவது முதலமைச்சர் பன்சிலால் தலைமைச் செயலகத்தில் செயலாளர்கள் - இலாகாத் தலைவர்களிடை பேசுகையில் குறிப்பிட்டார்.

# தென்னகக் குழந்தைகட்குப் பாதகமான மற்றொரு நடவடிக்கை

## மத்திய பள்ளிகளில் இனி இந்தியே பாட மொழியாம்

### ஆங்கில வகுப்புகள் அடியோடு எடுபடுமாம்

புதுடில்லி, மே 22—

மத்திய கல்வியமைச்சுத் துறையின்கீழ் இயங்கிவரும் மத்திய பள்ளிகளின் நிர்வாகம், இந்தி பேசாத மக்களுக்குப் பாதகமான முறையில் பெரிய கொள்கைப் பிரச்சினை ஒன்றை முடிவு செய்திருக்கிறது.

நாட்டிலுள்ள 118 மத்தியப் பள்ளிகளிலும் இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புக்களும் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புகளும் தனித்தனியே இயங்கிவரும் ஏற்பாட்டை நீக்கிவிட முடிவு செய்துவிட்டதாம்.

1968—69-ம் ஆண்டில் மானிடவியல், சமூகவியல் ஆகிய பாடங்களை முதலாவது வகுப்பிலிருந்து ஆருவது வகுப்பு வரை இந்தியிலேயே நடத்துமாறு தாக்கீது அனுப்பியுள்ளது. அதன் பிறகு, ஏழு எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்ரும் வகுப்புகளுக்கும் இந்தியைப் பயிற்சி மொழியாக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுமாம்.

**"இந்த உத்தரவைக் கடுமையாகச் செயல்படுத்த வேண்டும்" என்றும், எல்லாத் தலைமையாசிரியர்கட்கும் டெல்லியில் உள்ள தலைமையகம் அறிவித்துள்ளது.**

**இந்தப் புதிய உத்தரவின் விளைவாக, இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும், இந்தி மொழியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.**

இனி, ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்பு தனியே இயங்குவது என்பது எந்தப் பள்ளியிலும் இயலாத காரியம்.

இந்தியைத் தாயமொழியாகப் கொண்டிராதவர்களின் குழந்தைகளுக்கென்றே முக்கியமாக, ஆங்கிலத்தில் பாடம் நடத்தும் வகுப்புகள தனயே இயங்கிவந்தன; இன இந்த வகுப்புகளுக்கும் ஆபத்து வந்துவிட்டது!

**இந்தப் பள்ளிகளில் உள்ள இந்தி பேசாத பகுதி ஆசிரியர்கள்--மாணவரிடையே அதிலும் குறிப்பாகத் தமிழகம், கேரளம் போன்ற இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள இத்தகைய பள்ளிகளைச் சேர்ந்தவர்களிடையே இந்தப் புதிய உத்தரவு பெரும் கலக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.**

இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சேன்னைச் சந்தித்து இந்த உத்தரவுக்கு எதிராக முறையிட்டுக் கோண்டதாகத் தெரிகிறது.

'இந்தியும் ஆங்கிலமும் பயிற்சி மொழிகளாக இருக்கும்' என்று அமைச்சரவை செய்திருக்கும் முடிவுக்கு மாருகத் தந்திரமாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், 'கொல்லைப்புற வழியாக இந்தியைத் திணிக்கும் முயற்சியாகும் இது' என்றும் அவர்கள் கல்வியமைச்சரிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இத்தகைய மத்திய பள்ளிகளில் 57,000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அடிக்கடி இடம் மாறக்கூடிய அரசாங்க ஊழியர்களின் பிள்ளைகள் கல்வி பயிலுவதற்கென்றே இந்தப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளிகள் ஆந்திரத்தில் ஐந்தும், குசராத்தில் ஆறும், கேரளத்தில் நான்கும், தமிழகத்தில் எட்டும், மாராட்டிரத்தில் பதினைந்தும், மைசூரில் ஏழும், மேற்கு வங்கத்தில் ஐந்தும் உள்ளன.

**இந்தி வெறியர்களின் ஆதிக்கத்தின்கீழ் மத்திய அரசு இருந்துவருவதன் விளைவாகவே, மத்திய அரசு நிர்வாகத்தில் உள்ள இந்தப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழி நிலையிலிருந்து அறவே அகற்றிவிட்டு எல்லாம் இந்தி மயமாக்கும் செயலில் துணிந்து இறங்கியுள்ளனர்!**

**"கல்வி என்பது மாநில அரசின் பொறுப்பு வரம்புக்கு உட்பட்டது என்று அரசியல் சட்டத்தில் இருப்பதால்தானே, நாம் இந்தி திணிப்பதை இவர்கள் எதிர்க்கிருர்கள்; நாமும் அதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க நேரிடுகிறது; அதனுல், அரசியல் சட்டத்தையே மாற்றி கல்வி மத்திய அரசின் பொறுப்பு வரம்பில் உள்ளது என்று செய்துவிட்டால் என்ன?"**

என்றுகூட இந்தி வெறியர்கள்,
நினைக்கத் தோடங்குவார்கள்!

## மற்றொரு புதிய 'சேனை'!

### தாழ்த்தப்பட்டோர் நலனுக்குப் பணியாற்றுமாம்!

ஔரங்காபாத், மே 22—

'பீம சேனை' என்ற பெயரில் மற்றொரு புதிய சேனை ஒன்று இங்கு அமைக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் காப்பதற்காக இந்தச் சேனை அனைத்திந்திய அடிப்படையில் இயங்குமாம்.

இந்தச் சேனை அமைக்கப்பட்டதன் அவசியம் குறித்து இதன் அமைப்பாளரான திரு. ஷியாம் சுந்தர் என்பவர் விளக்குகையில்,

**"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கோடுமைகள் அதிகரித்துவருகிறது"**

எனக் குறிப்பிட்டார்.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனத் தனி வாக்காளர் பட்டியலும், தனிப் பல்கலைக்கழகங்களும் ஏற்படுத்தவேண்டும்" என்ருர்.

நாடு முழுமையிலும் தாம் சுற்றுப் பயணம் செய்ததாகவும், எங்கும் தமது இயக்கத்துக்கு ஆதரவு இருந்துவருவதாகவும் கூறினர்.

ஏற்கனவே குல்பர்கா. ஔரங்காபாத், பம்பாய் முதலான இடங்களில் குழுக்கள் அமைக்ப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

"டாக்டர் அம்பேத்கார் நிறுவிய சமதா சைனிக் தளத்தைப் போன்றதே இந்தப் புதிய சேனை" என்ருா.

"தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனும் புதுயிர் பெறும்" என்று மேலும் அவர் கூறினர்.

## 27,00,000 பேருக்கு வேலை இல்லை!

### ஏட்டுக் கணக்கு இது--நாட்டு நிலை என்னவோ!

புதுடிலலி, மே 22—

இந்தியா முழுவதிலும் உள்ள வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலை கேட்டுப் பதிவு செய்துசொண்டவர்களின் எண்ணிக்கை 1967 ஆம் ஆண்டு முடிவில் 27,40,43,35 ஆக இருந்தது.

இவர்களில் 60 சதவிகிதத்தினர் மெட்ரிகுலேஷனுக்குக் குறைந்த கல்வித் தகுதியுள்ளவர்களும், படிப்பறிவே இல்லாதவர்களும் ஆவர்.

35 சதவிகிதத்தினர் மெட்ரிகுலேஷன் உட்பட பட்டப் படிப்புக்குக் குறைந்த கல்வித் தகுதியுடையவர்கள் ஆவார்கள்; 5 சதவிகிதத்தினர் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களும், பட்ட பிற்கால (ஆராய்ச்சி) படிப்புப் படித்தவர்களும் ஆவார்கள்.

வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பெயாப் பதிவு செய்து கோண்டவர்களின் கணக்கு தான் இது; பெயர்ப் பதிவு செய்துகோள்ளாமலே வேலையில்லாது திண்டாடிக்கொண்டிருப்போர் நாட்டில் இன்னும் எத்தனை இலட்சம் பேர்களோ!

## மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு?

சென்னை, மே 22—

ஆகஸ்டு 25-ந் தேதியன்று நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள சென்னை மாநகராட்சித் தேர்தல்கள் ஒரு மாதம் அல்லது ஆறு வார காலம் ஒத்திவைக்கப்படலாம் என்று தெரிகிறது.

ஆகஸ்டில் தேர்தல் நடத்துவதில சில நடைமுறைச் சிரமங்கள் இருப்பதாலும், நிர்வாக நலனை முன்னிட்டும, சிறிது காலம் ஒத்திவைக்கப்டுவதாகக் கூறப்படுகிறது.

## தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காணத் திட்டம்

### ஆய்வுக் குழுவின் புதிய யோசனை

புதுடில்லி, மே 23—

"தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இப்போது தொழில் டிரிபியூனல்களும, தொழில் நீதிமனறங்களும் இருப்பதற்குப் பதில், 'தொழில் நீதி விசாரணைக் குழு'வை அமைக்கலாம்"

என்று தேசியத் தொழில் குழுவுக்கு, ஆய்வுக் குழு அளித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"தொழில் தகராறு நீதி விசாரணைக் குழுவில் தொழில் துறையில் அனுபவம் உள்ளவர்கள் உறுப்பினர்களாக இருக்கவேண்டும்.

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இந்தக் குழுவுக்குத் தலைவராக இருக்கவேண்டும்; ஓய்வு பெற்ற நீதி—நிர்வாக அதிகாரி தலைவராக இருக்கக்கூடாது.

இந்த ஏற்பாட்டில்தான், சமரசப் பேச்சுக்கள் முறியும் சந்தர்ப்பங்களில் தொழில் அதிபர்களும், தொழிற் சங்கங்களும் அத்தகைய குழுவை நேரடியாக அணுக முடியும்.

வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பை உண்டுபண்ணக்கூடிய தொழில் தகராறுகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பே தொழில் நீதி விசாரணைக் குழு, வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பைத் தடை செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

## விலை அதிகம்!

### திட்டம் கைவிடப்பட்டது!

பெங்களூர், மே 22—

திருவாங்கூர் இளவரசருக்குச் சொந்தமான 'இராமப் பிரியா' என்ற மாளிகையை வாங்கும் திட்டத்தை கருநாடக அரசு கைவிட்டுவிட முடிவு செய்துவிட்டது!

இன்று அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததும், செய்தித்துறையமைச்சர் திரு. மகம்மது அலி இத்தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திருவாங்கூர் இளவரசர் இந்த மாளிகைக்குக் கேட்கும் விலை மிகவும் அதிகமாக இருந்ததால், வாங்கும் திட்டத்தையே கைவிட அமைச்சரவை முடிவு செய்ததாம்.

# ஆண்டவன் அருளால் அல்ல—மக்கள் ஆதரவினாலேயே பதவி பெற்றோம்!

## மாற்றுக் கட்சியாகக் காங்கிரசு நீடித்திருக்கவே விரும்புகிறோம்

## நடைமுறையை மாற்றிக்கொள்ளாவிடில் அதன் எதிர்காலம் எப்படியோ !

### சுப்பிரமணியத்துக்கும் அவர் 'சீடகோடி'களுக்கும் அமைச்சர் கருணாநிதி இடித்துரை

சென்னை, மே 22—

" தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம், காங்கிரசுக் கட்சி அரியானாவில் பெற்ற வெற்றியைக் குறிப்பிட்டு 'தொடர்ந்து பல வெற்றிகளை இந்தியா முழுவதும் குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்திலும் பெறுவோம்' என்று சூளுரைத்திருக்கிறார்.

" அரியானாவில் பெற்ற வெற்றிபோல் காங்கிரசுக் கட்சி எல்லா இடங்களிலும் பெற வேண்டும் என்பதிலே சுப்பிரமணியத்துக்கு இருக்கின்ற அக்கறை -- ஆர்வத்தைப்போல்—அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் விரும்புவதுபோல், தமிழ்நாட்டைச் சேர்ந்தவராதலால் தமிழ்ப் பண்பு அவரிடம் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ என்னவோ – நாம் கட்டிக்காத்து வரும் பண்பின் அடிப்படையில் -'காங்கிரசுக் கட்சி பெறவேண்டும்' என்றுதான் விரும்புகிறோம்.

" வெற்றி பெற விரும்புகின்ற காங்கிரசு, 'இன்றுள்ள நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்போகிறதா -- நடைமுறையை மாற்றிக்கொ ்டு பயணத்தை நடத்தப்போகிறதா' என்பதுதான் முன்னாள் அமைச்சரும் இந்நாள் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சித் தலைவருமான சி. சுப்பிரமணியத்திற்கு விடுக்கின்ற கேள்விக் கணையாகும் "

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சென்னை -- பெத்துநாய்க்கன்பேட்டையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை 26-வது வட்ட எம் ஜி. ஆர். மன்றத்தின் ஆண்டு விழாவினையொட்டி நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்துக்குத் தோழர் பலராமன் தலைமைவகித்தார்; தோழர்கள் ஏ. கோவிந்தராசன், பூவை. இராமலிங்கம், இராதாகிருஷ்ணன், எம். ஆர். கண்ணன் எம்.எல் ஏ., என். வி. என். சோமு பி ஏ.பி.எல். ஆகியோரும் பேசினர்.

### அடக்க உணர்வும் அச்ச உணர்வும் ஏற்பட...

அமைச்சர் கருணாநிதி அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :—

" காங்கிரசுக் கட்சி அடியோடு ஒழிந்துவிட வேண்டும் என்று தி. மு. கழகம் விரும்பவில்லை. ஆளுங்கட்சிக்கு ஏற்ற எதிர்க் கட்சி இருப்பது அரசியல் சனநாயகத்துக்கு — ஆரோக்கியத்துக்குத் தேவை என்பதனால்தான், 'மாற்றுக் கட்சி' என்று அழைக்கிறோம் !

தி.மு.க -வுக்கு மாற்றுக் கட்சியாகக் காங்கிரசும், காங்கிரசுக்கு மாற்றுக் கட்சியாக தி.மு.க.-வும் இருக்கிறது.

'மாற்றுக் கட்சி' என்னும்போதே, ஆளும் பொறுப்பினை மாற்றிக்கொள்வது என்பது புரிகிறது.

இதுவரையில் காங்கிரசுக் கட்சி ஆளும் கட்சியாக இருந்தது; இன்று தி. மு. கழகம் ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. பொறுப்பை மாற்றிக்கொள்ளும் தன்மையால், 'மாற்றுக் கட்சி' என்கிறோம் !

'மாற்றுக் கட்சி' என்பதற்கும், 'மாற்றார் கட்சி' என்பதற்கும் பெரும் வேறுபாடு உண்டு என்பதனைத் தமிழ் புரிந்தவர்கள் அறிவார்கள்.

பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்து அமைக்கப்பட்டால், அது, 'மாற்றான் கட்சி! சீனாவிலிருப்பவர்களால் அமைக்கப்பட்டால் அது மாற்றான் கட்சி!

காங்கிரசைப்போல் எதிர்க் கட்சி தேவைதான்; எதிர்க் கட்சி இருந்தால்தான் அடக்க உணர்ச்சியும், அச்ச உணர்ச்சியும் ஏற்படும்; இல்லாவிட்டால், 'நம்மைக் கேட்பார் யார்?' என்ற எண்ணம் வந்துவிடும்; அதனால் நாடு சீர்குலைக்கப்படும்; இது மனித சுபாவம் !

'நல்ல எதிர்க் கட்சி வேண்டும்' என்ற இலக்கணத்தை நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கும் போது மட்டுமல்ல — எதிர்க் கட்சியாக இருந்தபோதே வற்புறுத்தி வந்தோம் !

### திடீரென வாழ்வு வந்துவிட்டதா எங்களுக்கு ?

'ஆட்சி மாற்றம்' என்பது, மக்கள் ஆதரவு பெற்று நடைபெற வேண்டிய காரியம். சனநாயக முறைப்படி அண்ணா முதலமைச்சராகி இருக்கிறார்; தி.மு. கழகம் ஆளும் கட்சியாக இருக்கிறது

ஆண்டவன் 'அருள்' திடீரெனக் கிடைக்கப் பெற்று நாங்கள் அமைச்சர்களாகிவிடவில்லை ! திடீரென வந்துவிட்ட வாழ்வு அல்ல ! திடீரென வந்த அதிகாரம் அல்ல !

பரூக் மன்னனை நாடு கடத்திவிட்டு நகீப் ஆட்சிக்கு வந்து—நகீபை சிறையிட்டுவிட்டு நாசர் ஆட்சிக்கு வந்ததுபோன்ற இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஆட்சிக்கு வந்திடவில்லை !

நாட்டு மக்களை சனநாயகத்திற்குத் தயார் படுத்த தி. மு. கழகத்திற்கு 15 ஆண்டுக் காலம் பிடித்திருக்கிறது !

### கற்றுத் தந்த முறைதான் என்ன?

'சட்டமன்றத்தில் அத்தனைபேரும் தி. மு. க.—காங்கிரசே இல்லை' என்றிருந்தால், சட்டமன்றத்துக்குப் பெருமை இல்லை—மகிமை இல்லை ! எதிர்க் கட்சி இருக்க வேண்டியது அவசியம். அந்த எதிர்க் கட்சியாக தி. மு. க.-வும் ஆகலாம்; இன்று எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரசு ஆளுங்கட்சியாகவும் மாறலாம். அப்படி மாறி மாறி ஆளுங்கட்சியும், எதிர்க் கட்சியும் சுழல வேண்டும்; அப்போதுதான் 'ஏ, அப்பா; தவறு செய்தால் மக்கள் கவிழ்த்துவிடுவார்கள்' என்ற பயம் ஏற்படும் !

அந்த நிலையை அடையத் த. நா. கா. க. தலைவர் தமது சீடகோடிகளுக்கு வகுத்துத் தந்திருக்கும் முறை என்ன? கண்ணியமாகப் பேசக் கற்றுக்கொடுத்திருக்கிறாரா? கௌரவமாக எழுதக் கற்றுக் கொடுத்திருக்கிறாரா?

கற்றுக்கொடுப்பது இருக்கட்டும்: சுப்பிரமணியம் அதுபோல நடக்கிறாரா?

அண்ணா அமெரிக்காவுக்குச் சென்றபோது காங்கிரசிலுள்ள நாலாந்தரப் பேச்சாளர்கூட பேசத் தயங்கும் வார்த்தைகளை சுப்பிரமணியம் பேசினார் ! அவ்வளவு எரிச்சல் அவருக்கு !

அரியானாவில் பெற்ற வெற்றி காங்கிரசுக்காரர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது.

### சாதனையைக் கண்டு வேதனைப்படுகிறார் !

அரியானாவில் பெற்றது என்ன வெற்றி? 1967-ல் காங்கிரசு பெற்ற இடங்கள் 48; அதிலே இருந்த 20 பேர் எதிர்க் கட்சிக்கு ஓடிவிட்டதால், எதிர்க் கட்சி அமைச்சரவை அமைத்தது. பிறகு காங்கிரசுக்காரர்கள் பணம் கொடுத்து அங்கிருந்து சிலரை இழுத்துக்கொண்டதால் அந்த அமைச்சரவையும் கவிழ்ந்து அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி வந்தது. இப்போது நடைபெற்ற தேர்தலில், 1967-ல் பெற்ற அதே 48 இடங்களைத்தான் இப்போதும் பெற்றிருக்கிறது.

அரியானாவில் காங்கிரசு எப்படி வெற்றி பெற்றது என்பதை அரசியல் புரிந்தவர்கள் அறியமாட்டார்களா? அரியானாவில் எத்தனை கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது என்பதனை அறியமாட்டார்களா?

தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெறத் தக்கவிதத்தில் தொண்டர்களைப் பண்படுத்தக் காங்கிரசுக் கட்சித் தலைவர் முயற்சி எடுத்துக் கொண்டாரா இல்லையே! பதவி பறிபோனதால் புண்பட்டிருக்கிற அவர் எப்படி பண்படுத்தப் போகிறார்!

அதனால்தான், எரிச்சலைக் கொட்டுகிறார்—எரிதணலை வீசுகிறார்! நம்முடைய சாதனையைக் கண்டு அவர் வேதனைப்படுகிறார் !"

## 'மேழித் திருமகள்'!

### புதிய அற்புத நெல்

சைகோன், மே 22—

'தான் நாங்—2 அரிசி' அல்லது 'மேழித் திருமகள் அரிசி' என்னும் புதிய வகை நெல் எவ்வாறு பயிரிடுவதென்பதை வியட்நாம் குடியானவர்களுக்குக் கற்றுக்

(3-ம் பக்கம் பார்க்க)

## குறைந்த விலையில் புதுவகைக் கூரைத் தகடு!

சென்னை, மே 22—

மலிவான விலையுடையதும், கனமில்லாததும், சூரிய வெப்பத்தை 80 சதவிகிதம்வரையில் தாங்கக் கூடியதுமாகத் தயாரிக்கப்படும் புதுவகைக் கூரைத் தகடு, நாட்டில் அடுத்த மாதம் விற்பனைக்கு வரும்.

இக்கூரைகள், சென்னைத் தொழிற்சாலை ஒன்றில் மெக்சிகோ ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படுகிறது.

'ஆஸ்பெஸ்டாஸ்' சிமெண்டுத் தகடு, மற்றும் பிற வகைத் தகடுகளைவிட இந்தப் புதுவகைத் தகடு விலையில் பாதிக்கும் குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

மற்ற வகைக் கூரைத் தகடுகள் சதுர அடிக்கு ரூ. 1 05-முதல் ரூ. 1.20-வரை உள்ளது என்றால், புது வகைத் தகடு சதுர அடிக்கு 50 காசுதான் இருக்கும்.

புதுவகைக் கூரைத் தகடு காரணமாக அந்நியச் செலாவணியும் ரூ. 3-கோடிவரை மிச்சப்படும்.

புதுவகைக் கூரைத் தகடு உற்பத்தியும் பயன்பாடும், சேரி ஒழிப்பு —கிராமச் சீரமைப்புத் திட்டங்களுக்கான மலிவான வீடுகளுக்கு மிகவும் பயனுடையதாகவும், மலிவாகவும் இருக்குமாம்.

# குற்றவாளிகளைத் திருந்தியவர்களாக்கும் சிறைக் கோட்டம்!

## கல்வியிலும் தொழிலிலும் தேர்ச்சி பெறுகின்றனர்!

### மதுரைச் சிறைச்சாலை ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது !

மதுரை மத்திய சிறைக்குள் நடைபெற்ற முதலாண்டு விளையாட்டு விழாவில், கைதிகள் தாங்கள் சிறைக்குள் அடைபட்டுக் கிடப்பதையும் மறந்து பல்வேறு விளையாட்டுக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு அவரவருக்குள்ள திறமைகளையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டினர்.

சிறைக் கைதிகளாக இருப்பினும் அவர்களிடையே சிறந்த விளையாட்டு வீரர்களும், கலைஞர்களும், எழுத்தாளர்களும், கவிவாணர்களும் இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

கைதி ஒருவராலேயே எழுதப்பட்ட நாடகம் ஒன்றைப் பல கைதிகள் சேர்ந்து நடித்துத் தங்கள் கலைத் திறமையைக் காட்டினர்.

இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் மிகப் பொருத்தமான இடத்தில் அமைந்துள்ள இந்தச் சிறைச்சாலைக்குள் 1500 கைதிகள் இருக்கின்றனர். இவர்களில் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் முதல் சில நாட்களே தண்டனை பெற்றவர்கள் வரை உண்டு. அவர்கள் பல்வேறு துறைகளிலும் பணியாற்றுவதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 4 இலட்சம் வரை சிறைக்கு வருவாய் கிடைக்கிறது.

ஒவ்வொரு நாளும் காலை உணவை முடித்துக்கொண்டு அனைவரும் பல்வேறு அலுவல்களைக் கவனிக்கச் செல்கின்றனர்.

தோட்ட வேலை, நெசவு, தச்சு வேலை, பாய் முடைதல், தையல் முதலிய வேலைகளில் பலர் ஈடுபடுகின்றனர்.

மற்றும் சில கைதிகள் முதியோர் கல்விவகுப்புக்குச் செல்கின்றனர்.

உடல் நிலை சரியில்லாதவர்கள், சிறையில் உள்ள மருத்துவமனைக்கோ, படிப்பகத்துக்கோ செல்கின்றனர்.

இருபது வயது முதல் 45 வயது வரையுள்ள 500-க்கு மேற்பட்டோர் முதியோர் கல்வி வகுப்புக்களுக்குச் செல்கிறார்கள். அவர்களில் சிலர் தமிழ்ப் புலவர் தேர்விலும், மெட்ரிகுலேஷன் தேர்விலும் தேறியிருக்கிறார்கள் ; சிலர் சிறுகதை எழுத்தாளராகவும், நடிகர்களாகவும், கவிஞர்களாகவும் இருக்கின்றனர்.

சிறை மருத்துவமனையில் 20 படுக்கைகள் உள்ளன.

புதிதாக வந்து சேரும் கைதிகளுக்கு நெசவு, தச்சு வேலை, புத்தக பைண்டிங் முதலிய வேலைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

கடந்த 1966—67-ல் மட்டும் ரூ. 4 இலட்சம் பெறுமானமுள்ள பொருள்களைக் கைதிகள் உற்பத்தி செய்திருக்கின்றனர்.

சிறையில் செய்யப்பட்ட நாற்காலி, மேசை போன்ற மரச் சாமான்கள், அரசின் பல்வேறு துறைகளுக்குப் வழங்கப்பட்டிருக்கின்றன. தனிப்பட்டவர்களும் அவற்றை விலைக்கு வாங்கிக்கொள்கின்றனர்.

சிறையில் நெய்யப்படும் கட்டுக் கட்டும் (பேண்டேஜ்) துணி, ஏராளமான அளவில் மருத்துவமனைகட்கு வழங்கப்படுகிறது. இந்த வகையில் பல்வேறு தொழிற்சாலைகளிலும் 600 கைதிகள் பணியாற்றி வருகின்றனர்.

சிறையில் சிறந்த காய்கறித் தோட்டம் உள்ளது; சிறைக்கு வேண்டிய காய்கறி முழுமையும் இந்தத் தோட்டத்திலிருந்தே கிடைக்கிறது.

சிறையில் ஒரு சமய வழிபாட்டுக் கூடமும் உள்ளது. பல்வேறு சமயங்களைச் சேர்ந்த—சமயப் பற்றுள்ள கைதிகள், தங்கள் தங்கள் விழா நாட்களில் இந்தக் கூடத்தில் வழிபாடு நடத்துகின்றனர்.

சிறையில் நல்ல விளையாட்டு வீரர்கள் இருக்கின்றனர். அவர்கள் சிறைக்குள்ளும் வெளியிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

மதுரைச் சிறைச்சாலையில் சிறந்த பந்து (வாலி பால்)விளையாட்டுக் குழு ஒன்றும் உள்ளது. நகரில் நடைபெறும் பந்து விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தச் சிறை விளையாட்டுக் குழுவினர் பங்கெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று நம்பப்படுகிறது.

## அசோக்நகரிலிருந்து இரு புதிய பஸ்கள்

### பட்டினப்பாக்கம் — திருவல்லிக்கேணி செல்லும்

சென்னை, மே 23—

தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை நகரில், '12-இ' என்ற எண்ணில் புதிய வழித் தடம் ஒன்றினை மே 18-ம் நாள் முதல் ஏற்படுத்தியுள்ளது.

இந்த வழித் தடத்தில் நான்கு பஸ்கள் ஓடுகின்றன; அசோக நகருக்கும் — பட்டினப்பாக்கத்துக்கும் இடையில் எம். ஜி. ஆர். திடல், முருகேச நகர், லிபர்ட்டி, பவர் அவுஸ், ஆழ்வார்பேட்டை, சாந்தோம் அஞ்சலகம் ஆகிய இடங்கள் வழியாக 12-இ பஸ்கள் செல்லும்.

இந்த வழித் தடத்தில் அசோக் நகரிலிருந்து புறப்படும் முதல் பஸ் காலை 5-30 மணிக்கும், கடைசி பஸ் இரவு 9-53 மணிக்கும் புறப்படும்.

மந்தைவெளியிலிருந்து முதல் பஸ் காலை 5-58 மணிக்கும், கடைசி பஸ் இரவு 10-38 மணிக்கும் புறப்படும்.

இந்த வழித் தடத்தின் பயண காலம் 44 நிமிடங்கள். நேர் கட்டணங்கள் 35-காசுகள்.

### திருவல்லிக்கேணிக்கு

'25-பி' என்ற எண்ணில் அசோக் நகருக்கும்— திருவல்லிக்கேணிக்கும் இடையே மே 18-ம் நாள்முதல் மேலும் ஒரு புதிய வழித் தடத்தில் 4 பஸ்கள் விடப்படுகின்றன.

இந்த வழித் தடம், 'லிபர்ட்டி' வரையில், '12-இ'-யின் வழித் தடமாகவே இருக்கும்.

அங்கிருந்து ஸ்டர்லிங் சாலை, ஜெமினி, கலைக் கல்லூரி, மவுண்ட் சாலை அஞ்சலகம் ஆகியவை வழியாகச் செல்லும்.

இந்தத் தடத்தில் அசோக் நகரிலிருந்து புறப்படும் முதல் பஸ் காலை 5-மணிக்கும், கடைசி பஸ் இரவு 9-41 மணிக்கும் புறப்படும்.

திருவல்லிக்கேணியிலிருந்து முதல் பஸ் காலை 5-45 மணிக்கும், கடைசி பஸ் இரவு 10-26 மணிக்கும் புறப்படும்.

இதன் பயண காலம் 44 நிமிடங்கள். இதன் நேர்க் கட்டணம் 35 காசுகள்.

சீசன் டிக்கெட் வைத்திருப்பவர்கள் மேற்கூறிய தடங்களில் ஜெமினி, வடபழனி, எம். ஜி. ஆர். திடல் ஆகிய கட்டங்கள்வரை பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

### இந்திரா நகர்வரை '23-பி'

சென்னையில் எழும்பூருக்கும்— அடையாற்றுக்கும் இடையே '23-பி' என்ற தடத்தில் ஓடும் பெருந்துகள், இனி எழும்பூரிலிருந்து இந்திரா நகர்வரை செல்லும். 23—5—68 அன்றுமுதல் இந்த மாற்றம் நடைமுறைக்கு வருகிறது.

இப்பெருந்துகள் இந்திரா நகரிலிருந்து வருகையில் எட்வர்ட்ஸ் எலியட்ஸ் சாலை—மௌபரீஸ் சாலைச் சந்திப்புவரை பழைய பாதையிலேயே வரும்; பின்னர், அது முதல் '23-ஏ' தடத்தில் சென்று எழும்பூரை அடையும்; திரும்புகாலிலும் இம்மாற்றம் அமுலாகும்.

எழும்பூரிலிருந்து முதல் பெருந்து காலை 6-01 மணிக்கும், கடைசிப் பெருந்து இரவு 10-22 மணிக்கும் புறப்படும்

இந்திரா நகரிலிருந்து முதல் பெருந்து காலை 5-05 மணிக்கும், இறுதிப் பெருந்து இரவு 9-26 மணிக்கும் புறப்படும்.

## பள்ளப்பாளையத்தில் கழகக் கூட்டம்

20—5—68-ல் கரூர் பள்ளபாளை... தி.மு.க. சார்பில் தோழர் ...ம். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஒளிமாறன், சிவானந்தம் ஆகியோர் பேசியபின், தோழர் பரமசிவம் சண்முகம், கழக ஆட்சியின் சாதனைகள் குறித்து விரிவாகப் பேசினர்.

## ஸ்டுடியோ தொழிலாளர் அறப்போர்

### அனைத்துக் கட்சிக் குழு அமைப்பு

சென்னை, மே 20—

ஏ. வி. எம். ஸ்டுடியோவும், பிரகாஷ் ஸ்டுடியோவும் திடீரென்று மூடப்பட்டு 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பல நாட்களாக வேலையின்றி அவதியுறும் நிலை பற்றிப் பரிசீலனை செய்ய 19—5—68 அன்று வடபழனி, சாலிக் கிராமம் வட்டாரங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள்—தொழிற் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.

தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளன அழைப்பிற்கிணங்க, பல கட்சித் தலைவர்களும், மற்றோரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

"300 க்கு மேற்பட்ட குடும்பங்கள் பட்டினியால் பரிதவிக்க, எந்தக் காரணமுமின்றி ஏ. வி. எம். ஸ்டுடியோ மூடப்பட்டது அநியாயமான ஓர் செய்கையாகும்" என்று கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் ஒருமுகமாகக் கருதினர்.

இதேபோன்று, நான்கு மாதங்களுக்கு மேலாகத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்காமலிருந்துவிட்டு, அவர்களுக்கு மே தினப் பரிசாக பிரகாஷ் ஸ்டுடியோவை மூடிவிட்டதையும் அனைவரும் வன்மையாகக் கண்டித்தனர்.

இந்த இரு நிறுவனத்தினரும் கடைபிடிக்கும் தொழிலாளர் விரோதக் கொள்கைமீது வட்டாரத்து மக்களுக்கு உள்ள அதிருப்தியை வெளியிடவும், இந்த நிறுவனங்களைத் திறந்து தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவும் அனைத்துக் கட்சி குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அனைத்துக் குழுவின் உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

நகராண்மைக் கழக உறுப்பினர் சா கணேசன், செல்லக்கண்ணு (தி மு க.), டி. அய்யாவு, மீ பி. கோவிந்தன், பணிக்கர், எஸ் பி. செல்லப், ந ராசன், என். எஸ். இராமசாமி, சௌந்தரராசன், என். வி ரமணி, துரைராஜ், சுந்தரம், நாராயணன், ந. கோவிந்தன், தாந்தோணி, என். சேஷாத்திரி, எம். பி சீனிவாசன்.

மேற்படி குழுவினர் பட்டினியால் வாடும் தொழிலாளர்களுக்கு நிவாரணமளிக்கும் அளவில், இந்த வட்டாரங்களில் நிதி வசூல் செய்வார்கள்; நிறுவனத்தினரின் மீது மக்களது பொதுவான கண்டனத்தைத் தெரிவிக்க அனைத்துக் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடத்துவர்கள்; தொழிலாளர்களின் அவல நிலையை அரசினரின் கவனத்திற்குக் கொணர்ந்து தொழிலாளர் நியாயம் பெற எல்லா முறைகளிலும் முயற்சி செய்வார்கள்.

## அச்சிறுப்பாக்கம் தொழிற் பயிற்சிப் பள்ளி

### சேர விரும்புவோர் கவனிக்க :

அச்சிறுப்பாக்கம் தமிழ் நாடு கைத்தொழில் பயிற்சிப் பள்ளியில் 1961-ம் ஆண்டு முதல் தச்சுப் பயிற்சி நடைபெற்று வருகிறது; இது, ஆசாங்க ஒப்புதல் பெற்றது.

மாணவர் தங்க விடுதி வசதியுண்டு; தாழ்த்தப்பட்ட மாணவர்களும், பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

சேர விரும்பும் மாணவர்கள், கீழ்க்காணும் முகவரிக்கு ரிப்ளை கார்டுடன் 29—5—68-க்குள் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

முகவரி:—இ எம் சுவாமி, நிர்வாகி, தமிழ்நாடு கைத்தொழில் பயிற்சிப் பள்ளி, அச்சிறுப்பாக்கம், மதுராந்தகம் வட்டம்.

## வேலைநிறுத்தமும் கதவடைப்பும் முடிந்தன

### கோவை மாவட்டத்தில் இரு ஆலைகளில் வேலை துவக்கம்

கோவை சிங்காநல்லூர் காட்டன் ஜூபிலி மில்லில் 500 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்து விட்டனர். இது சம்பந்தமாக, 4—5—68 முதல் எல்லாத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்துவந்தனர். உண்ணாநோன்பு அறப்போரும் நடத்தினர்.

16—5—68 அன்று கோவைத் தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையில் விசாரணை நடைபெற்றது; 'லேபர் கமிஷனர் முடிவுக்கு விடுவது' என்று முடிவு செய்யப்பட்டது.

வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றும், வேலைநீக்கம் செய்யப்பட்ட 500 தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் வரையில் வேறு எந்தப் புதிய தொழிலாளரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் அதிகாரி கூறியதன்பேரில் 17—5—68 காலை 7-மணியிலிருந்து நடைபெறுகிறது.

★

கோவை கணபதி இராமகிருஷ்ணா ஆலையில் தொழிலாளர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு 10—4—68 முதல் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. பின்னர் தொழிலாளர் அதிகாரி முன்னிலையில் சமரசப் பேச்சுவார்த்தையும் முடிவு பெறுவதால் தொழில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டது. பின்னர் 9—5—68 முதல் கதவடைப்புச் செய்தார்கள். இரண்டு தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக தொழில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டதால், அரசாங்க ஆணையின்படி 18—5—68 காலை 7 மணிக்கு கதவடைப்பு ரத்து செய்யப்பட்டு தொழிலாளர்கள் 18—5—68-லிருந்து வேலை செய்கிறார்கள்.

## பள்ளிகளுக்கு வெள்ளையடிக்கும் சீரணிப் பணி

### அந்தியூர் ஒன்றியத்தில் நிறைவு விழா

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்துள்ள 56 தொடக்க—உயர் தொடக்கப் பள்ளிகளிலும் சீரணியினர் மூலம் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பினாலும் நல்ல முறையில் வெள்ளையடித்து முடிக்கப்பட்டதையொட்டிய நிறைவு விழா, 17—5—68-ல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது

விழாவுக்கு அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் டி. கே. வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

ஆணையர் தமது தலைமையுரையில், சிறந்த முறையில் ஒத்துழைப்புக் கொடுத்து வெள்ளையடிக்கும் வேலையை முடித்துக் கொடுத்த சீரணி உறுப்பினர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தமது நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்தார்.

இந்தச் சீரணியினர் நல்ல முறையில் செயல்பட்டு, வெள்ளையடிக்கும் வேலையில் அ. வெற்றிவேல், டி. பி சாமராஜ், தவுட்டுப்பாளையம் முனியப்பன், தேவணன் ஆகியோர் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவு விழாவில் சீரணி உறுப்பினர்கள் பழனியப்பன், பூமாலை, ஆசிரியர்கள் செகநாதன் பொன்சாமி, அருமைநாயகம் ஆகியோர் வெள்ளையடிக்கும் பணியில் தங்களது அனுபவங்களை எடுத்து விளக்கினர்கள்.

கல்வி வளர்ச்சி அலுவலர் ஆர். ஜி. சண்முகநாதன் நன்றி கூற நிறைவு விழா இனிது முடிந்தது.

## விமானத்தின் அற்புத சாதனை!

இலண்டன் விமான நிலையத்தில் வந்திறங்கிய பி ஓ ஏ. சி. விமானம், ஓர் அற்புத சாதனை புரிந்தது!

146 பயணிகளை ஏற்றிக் கொண்டு சிகாகோ நகரிலிருந்து வந்த அந்த விமானம், இலண்டன் விமான நிலையத்தில், தானே இறங்கியது !

இந்த முதல் முயற்சியில் பயணிகளுக்கு எந்தவிதமான அதிர்ச்சியும் ஏற்படவில்லை !

விமானம் தானே இறங்கியதா அல்லது விமான ஓட்டி இறக்கினரா என்பதே அந்த 'பைலட்' சொன்ன பிறகுதான் பயணிகளுக்கே தெரியும் !

"இனி எங்கள் விமானங்கள் அனைத்துமே இந்தப் புதிய முறையில், தானே இறங்கத் தொடங்கிவிடும்" என்று விமான நிறுவன அதிகாரி ஒருவர் கூறினர்.

விமானத்தை கீழே இறக்குவதற்கான இயந்திரத்தை, 'கம்ப்யூட்டர்' கட்டுப்படுத்துகிறது.

## காங்கிரசு ஏட்டின் பித்தலாட்டச் செய்தி

'தாரமங்கலம் விவேகானந்தா கைத்தறி நெசவாளர் சங்கத்தில் தி. மு. க.-வினர் அராஜகம்' என்று காங்கிரசு நாளேடான 'நவ சக்தி' யில் வெளியான செய்தி முற்றிலும் முரணானதாகும்.

மேற்படி கூட்டுறவு சங்கமானது முழுக்க முழுக்கக் காங்கிரசு உறுப்பினர்களையே கொண்டு சங்கத் தலைவர் சாயச் சாலைக்காக ரூ. 9-ஆயிரத்திற்குக் கட்டிடம் வாங்குவதைத் தடுத்தவர்கள் பழம்பெரும் காங்கிரசுக்காரர்கள். அவர்களுக்குள்ளேயே கூச்சலும் குழப்பமும், பதவிச் சண்டைகளும் இருந்ததை ஊர் மக்கள் நன்கு அறிவார்கள்.

இதனால் சுமார் 300 குடும்பங்கள் பசியால் பரிதவித்தது உண்மைதான். அதற்குக் காரணமானவர்கள் தி. மு. க.-வினர் என்று 'நவ சக்தி' இதழின் செய்தி கூறுகிறது. ஆனால் இதைச் செய்தவர்கள் காங்கிரசுக்காரர்கள் தான்; இதை மெய்ப்பிக்கத் தயார் "பதவி நீக்கம் செய்யப்பட்ட நிர்வாகிகள் பழம்பெரும் காங்கிரசுத் தியாகிகள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தாரமங்கலம் தி. மு. க. செயலாளர் டி. சி. அரங்கசாமி அறிவிக்கிறார்.

### 'மேழித் திருமகள்'

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொடுக்க நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 800 வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

அமெரிக்க உதவியுடன் அங்கு சென்ற ஏப்ரல் மாதத்தில் வியட்நாம் அரசு, தேசிய நெல் உற்பத்திப் பயிற்சி நிலையம் நிறுவியது.

புதிய முறைகளில் இருவாரம் பயிற்சி பெற்ற பின்பு, 10 பெண்கள் உள்பட வேளாண்மைப் பலன் விரிவு அலுவலர்கள் 32 பேர் சான்றிதழ்கள் பெற்றனர்.

ஆண்டு முடிவுக்குள் 26 குழுக்கள்—மொத்தம் ஏறத்தாழ 800 வல்லுநர்கள்—இந்தப் பயிற்சி பெறவிருப்பார்கள்.

'தான் நாங்' அரிசி இருவகைகள் கொண்டது; ஒன்று—'ஐ. ஆர்.-5'; மற்றொன்று 'ஐ.ஆர்.-8'

பின்னால் சொல்லிய பெயர்களில், இவை பிலிப்பைன் நாட்டில் புகழ்மிக்கவை. அங்குதான் இந்தப் புதிய வகைகள் முதலில் உருவாக்கப்பெற்றன.

உள்நாட்டு வியட்நாம் நெல் வகைகளைக் காட்டிலும் இரண்டு, மூன்று பங்கு மகசூல் கொடுக்கிறது—புதிய நெல் ரகம்.

மகசூல் குறுகிய காலத்தில் கிடைப்பதால், ஆண்டுக்கு இரு போகங்கள் சாகுபடிக்கு நல்ல வாய்ப்பு உண்டு; இவற்றின் தாள் வலுவுள்ளது; எனவே கடும் மழையிலும் ஒடிந்துவிடாது.

## அமைச்சர் கருணாநிதி பிறந்த நாள்

### அண்ணா தலைமையில் மலர் வெளியீட்டு விழா

அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் 45-வது வயது பிறந்த நாள் சிறப்பு மலரை வெளியிடும் விழா 3—6—68 அன்று சென்னை பாலர் அரங்கில், தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அதுபோது, அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பொன்னாடை போர்த்துவார்.

மலரை சட்டமன்றத் தலைவர் திரு. ஆதித்தனார் வாங்குகிறார்.

திருவாளர்கள் ம. பொ. சிவஞானம், அப்துல் சமத் எம்.பி., எஸ். எஸ் மாரிசாமி எம்.பி., இராசேசுவரி நடராசன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

"அமைச்சர் முத்துச்சாமி தலைமையில், 'கவியரங்கம்' நடைபெறுகிறது; ஒன்பது கவிஞர்கள் பங்கு கொண்டு அமைச்சர் கருணாநிதி அவர்களின் பெருமைகளை கவிதை மழையாகப் பொழிய இருக்கிறார்கள்" என்று விழா அழைப்பாளர் திரு. இளமுருகு பொற்செல்வி அறிவிக்கிறார்.

### 'அண்ணா மணிமலர்'

பேரறிஞர் அண்ணாவின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாளை யொட்டி, மிகச் சிறப்பான முறையில் அண்ணாவின் பல வண்ண உருவ முகப்போடு — மாண்புமிகு அமைச்சர்கள், பல்வேறு அரசியல் தலைவர்கள், புலவர் பெருமக்கள் ஆகியவர்களின் கருத்துரை-வாழ்த்துரைகளோடு 'அண்ணா மணிமலர்' வெளியிடுவதற்குத் தோழர்கள் கீரை. ஆ. தமிழ்ச்செல்வன், மேலை. சி மதிமாறன் ஆகியவர்கள் முனைந்துள்ளனர்.

எழுத்தாளர்களிடமிருந்து கட்டுரை — கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.

'அண்ணா அறுபது' என்று அண்ணாவை அறுபது கோணங்களில் ஒரே கவிதையில் வடித்துத் தரும் முதல் தகுதி பெறும் கவிஞருக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

தொடர்புகொள்ளும் முகவரி:— அண்ணா பதிப்பகம், கீரனூர் (அஞ்சல்), (வழி) புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்.

## 11-வது வகுப்புக்கும் விருப்பப் பாடம்

### புதிய கல்வித் திட்டப்படி நடவடிக்கை

உயர்நிலைப் பள்ளிகளில் அடுத்து வரும் கல்வி ஆண்டிலிருந்து விருப்பப் பாடங்கள் 11-வது வகுப்புக்கும் நீட்டிக்கப்படும்.

சீரமைக்கப்பட்ட உயர்நிலைக் கல்வித் திட்டத்தின்படி விருப்பப் பாடம் படிப்பு 11-வது வகுப்புக்கும் நீட்டிக்கப்படுகிறது.

புதிய திட்டத்தின்படி, 6-வது, 9-வது வகுப்புகளுக்கும், புதிய பாடத் திட்டங்கள் 1966—67-ல் செயல்படுத்தப்பட்டு நிலைக்கிறது.

7-வது, 8-வது, 10-வது வகுப்புகளுக்குப் புதிய பாடத் திட்டம் சென்ற ஆண்டு செயலாக்கப்பட்டது.

சென்ற ஆண்டு 10-வது வகுப்பில் விருப்பப் பாடங்கள் புகுத்தப்பட்டன. 11-வது வகுப்புக்கும் இந்தக் கல்வி ஆண்டிலிருந்து விருப்பப் பாடங்களை நீட்டிப்பதன் மூலம் உயர்நிலைக் கல்விச் சீரமைப்புத் திட்டம் நிறைவு பெறுகிறது.

விஞ்ஞானக் கல்வி வளர்ச்சித் திட்டம் நீட்டிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதற்கென 218 பள்ளிகளைப் பொறுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 50 சதவிகிதமும், அடுத்த ஆண்டில் 50 சதவிகிதமும் செலவிடப்படும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் சோதனைச் சாலைக் கட்டிடத்துக்காக ரூ 25,000-மும், விஞ்ஞான சாதனங்களுக்காக ரூ. 15,000-மும் உதவி தரப்படும்.

# மொரார்ஜியின் 'தயவு' இல்லாமல் வெளிநாடு செல்லத் தடை!

## இரு அமைச்சர்கள் -- இரு துணையமைச்சர்கட்கு அனுமதி மறுப்பு

### அனுமதி பெருமல் சென்றுவந்த துணையமைச்சர்மீது பாய்ச்சல்

புதுடில்லி, மே 22—

வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்ய மத்திய அமைச்சர்களான அசோக மேத்தா, டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் ஆகியோருக்கு அங்கியச் செலாவணி தர துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் மறுத்துவிட்டார்.

அனைத்து நாட்டு சோஷலிஸ்டு மாநாட்டுக்குச் செல்ல மேத்தாவும், ஐரோப்பாவில் அனைத்து நாட்டு கப்பல் மாநாட்டில் கலந்துகொள்ள டாக்டர் ராவும் திட்டமிட்டிருந்தனர்.

துணை அமைச்சர்களான குருபாதசாமி, ஜெகன்னாத ராவ் ஆகியோர் வெளிநாடு செல்ல வாய்ப்பு மறுக்கப்பட்டது. டில்லியின் கோடை வெப்பத்திலிருந்து தப்பிக்க அவர்கள் விரும்பி இருக்கலாம்!

"அங்கியச் செலாவணி குறைவாக இருப்பதால், இன்றியமையாததாக இருந்தால்தான் அமைச்சர்களும், அதிகாரிகளும் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்" என்று அவர்கள் வேண்டுகோளுக்கு மொரார்ஜி தேசாய் பதிலளித்திருக்கிறார்.

இந்தியாவின் வெளி உறவுடன் நேரடித் தொடர்பற்றதும், அரசியல்மட்டப் பிரதிநிதித்துவம் அவசியமில்லாததுமான அனைத்து நாட்டு மாநாடுகளுக்கு வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதர்கள் பிரதிநிதிகளாகச் செல்லலாம்.

தம்முடைய முன் அனுமதி பெருமல் அண்மையில் தொழில்துறைத் துணையமைச்சர் பானு பிரதாப் சிங் அயல்நாடு சென்றதை தேசாய் எதிர்த்திருப்பதாகத் தெரிகிறது.

மொரார்ஜிக்குத் துணையமைச்சர் இன்னும் சரியான விளக்கம் கொடுக்கவில்லை!

# இரயிலில் அரிசி கள்ளக்கடத்தல்

## பாட்டரி இயங்கும் பெட்டிக்குள்ளும் பதுக்கல்

மதுரை, மே 23—

"தமிழகத்திலிருந்து கேரளத்துக்குக் கள்ளத்தனமாக கொண்டு போகப்படும் அரிசியைக் கண்டுபிடிப்பதற்காகச் சோதனை நடத்தப்படுவதால் மதுரைப் பிரிவில் இரயில்களின் பயணம் தாமதப்படுகிறது"

என்று, தென் பகுதி இரயில்வே டிவிஷனல் சூப்பிரண்டண்டு எஸ். இராமகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"கள்ளத்தனமாக அரிசியைக் கடத்துகிறவர்கள், இரயில் பெட்டிகளில் மாத்திரமன்றி இரயில் பெட்டிகளின் பாட்டரி பெட்டிகளிலும் கள்ளக் கடத்தல் அரிசியை மறைத்து வைக்கின்றனர்.

தமிழக-எல்லையில் சிவில் சப்ளை அதிகாரிகள் ஒவ்வொரு இரயில் பெட்டியின் பாட்டரி பெட்டியையும் சோதனை செய்வதற்கு நேரமாகிறது; அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம்வரை இதனல் இரயில்களை நிறுத்தி வைக்க வேண்டியிருக்கிறது.

சிவில் சப்ளை அதிகாரிகள் சோதனை நடத்துவதால் இரயில்கள் தாமதப்படுவதாக நெல்லை மாவட்ட கலெக்டருக்கு நான் தெரிவித்திருக்கிறேன்.

"இரயில் பெட்டிகளின் பாட்டரி பெட்டிகளைப் பூட்டி சாவிகளைக் கவர்களில் போட்டு முத்திரையிட்டு இரயில் கார்டு ளிடம் கொடுத்துவைக்க ஏற்பாடு செய்யலாம்; இரயில் பயணத்தில் தாமதத்தைத் தவிர்க்கலாம்" என்றும் கலெக்டருக்கு யோசனை கூறியிருக்கிறேன்."

பாலர் அரங்கம்
மே 24, 25, 26-ந் தேதிகளில்
மாலை 4-மணிக்கு
'டார்ஜானும் வேங்கைப் பெண்மணியும்'
(எம்.ஜி.எம். படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

உள்ளாட்சித்துறை அமைச்சர்

## மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

மே 24: விளாத்திக்குளம்—ஊராட்சி ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்பு;

மே 25: திரு. எம். எஸ். சிவசாமி அவர்களால் தூத்துக்குடித் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

மே 26 மாலை 4-30 மணி : பூம்புகார் இந்திர விழா.

# 'நவமணி' கட்டுரையில் தவருன தகவல்

## திருவான்மியூர் ஊராட்சிமன்ற உறுப்பினர் மறுப்பு

'நவமணி' 12—5—68 இதழில், 'முதலமைச்சரின் மணிவிழா—மந்திரி முத்துசாமியின் பரிசுத் திட்டம் நிறைவேறுமா ?' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் வந்த சில கருத்துக்கு திருவான்மியூர் ஊராட்சிமன்ற உறுப்பினர் ப. நடராசன் மறுப்புத் தெரிவித்துள்ளார்; அவர் தெரிவிப்பதாவது :—

"'நவமணி' 12—5—68 இதழில் 2-ம் பக்கம் 2-ம் பத்தியில், 'டிராக்டர் நாதம்' என்று வரும் வரியில் (18), 'திருவான்மியூர் பேரூராட்சி இன்னும் ஒப்புதல்கூடத் தெரிவிக்கவில்லை' என்று கட்டுரையாளர் எழுதியுள்ளார்.

ஆனல், முதலமைச்சரின் மணிவிழா ஓராண்டு தனித் திட்டத்தில், 'திருவான்மியூர் பேரூராட்சிக்கு ஒரு டிராக்டர் வாங்க வேண்டும்' என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது.

நிற்க; எமது பேரூராட்சி, 23—3—68-ல், அதன் தீர்மானம் எண் 134-ல், குறியளவுக்குக் கூடுதலாக ஒரு டிராக்டர்; ஒரு டில்லர்; ஒரு ட்ரைலர் ஆகியவை வாங்குவதற்கு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதையொட்டி அவைகளை வாங்குவதற்கு அனுமதி அளிக்கும்படி கிராம வளர்ச்சி நெறியாளருக்கு 15-4-68-ல் வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பார்வைக்கும் அதன் படி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, 'திருவான்மியூர் பேரூராட்சி ஒன்றுமே நடவடிக்கை எடுக்கவில்லை' என்ற கட்டுரையாளரின் செய்தி மிகவும் வருந்தத்தக்கது.

இதுபற்றி 'நவமணி' ஆசிரியர் அவர்களுக்கும் திருத்தம் வெளியிடுமாறு எழுதியுள்ளேன்.

# அமைச்சர்களுடன் தொழிற் சங்கத் தலைவர்கள்

## பஞ்சாலைப் பிரச்னை குறித்துப் பேசினர்

சென்னை, மே 23—

பஞ்சாலைத் தொழில் நெருக்கடி குறித்து முதலமைச்சர் அண்ணா, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி ஆகியோருடன் ஆலைத் தொழிலாளர் தலைவர்கள் சந்தித்து உரையாடினர்.

இந்தப் பேச்சுவார்த்தை தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில், நேற்று முதலமைச்சர் அண்ணாவின் அறையில் நடைபெற்றது.

ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் ஏ. சுப்பிரமணியம், எம். ஆர். வெங்கட்ராமன், எம். பூபதி, காட்டூர் கோபால், ஏ. நல்லசிவம் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

இன்று திருச்சியில் பஞ்சாலைத் தொழில் நெருக்கடி குறித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துகிருர்; ஆலை அதிபர்கள் பிரதிநிதிகளுடனும், தொழிலாளர் தலைவர்களுடனும் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையில், தொழிலாளர் நல அமைச்சர் செ. மாதவனும் கலந்துகொள்வார்.

# மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிப்பு

சென்னை, மே 23—

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் மே திங்கள் 25-ம் நாளுடன் முடிவடைகிறது.

நடைபெறவிருக்கும் மாநகராட்சித் தேர்தலையொட்டி, உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஆகஸ்டுத் திங்கள் 25-ம் நாள்வரை (3 மாதங்கள்) நீட்டித்து அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

# பூம்புகாரில் சிலப்பதிகார மாநாடு

பூம்புகாரில், மே 25 26 ஆகிய நாட்களில் பூம்புகார்க் கலை மன்றச் சார்பில் சிலப்பதிகார மாநாடு நடைபெறவிருக்கிறது.

முதல்நாள்(25—5—68) பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலும், இரண்டாம் நாள் உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலைமையிலும் மாநாடு நடைபெறும்.

குன்றக்குடி அடிகளார் மற்றும் தமிழறிஞர்கள் பலர் கலந்துகொள்கிருர்கள்.

பட்டிமன்றம், கருத்தரங்கு, நாடக—இசை நிகழ்ச்சிகளும் உண்டு.

# மாயூரம் நகராட்சியில் அண்ணு உருவப்படம்

## அமைச்சர் கருணாநிதி திறந்துவைக்கிருர்

25—5—68 மாலை 6-மணியளவில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மாயூரம் நகராட்சி மன்றத்தில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைக்கிருர்.

அதுபோது, அமைச்சர் கருணாநிதிக்கு நகராட்சிமன்றச் சார்பில் வரவேற்பு மடல் வாசித்தளிக்கப் படும்.

பொதுப்பணி அமைச்சர்

## மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

மே 24 மாலை 5 மணி : குளித்தலை—ஊராட்சி ஒன்றிய சமூகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டு விழா; ஊராட்சி ஒன்றியத்தின் வரவேற்பு; மாலை 6-30 மணி : 'காவிரி நகர்' நுழைவு வாயில் திறப்பு; இரவு 8-மணி : பொதுக் கூட்டம்.

மே 25 மாலை : பூம்புகார் இந்திர விழா; இரவு : மாயூரம் பொதுக் கூட்டம்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைச்சர் மதியழகன்

சுற்றுப்பயணம்

25—5—68 காலை 7-30 மணி : திருப்புவனம்—தி மு. க. வரவேற்பு; 9 மணி : மானமதுரை—திருமணம்; 10 மணி : விவசாயக் கிடங்குத் திறப்பு விழா; 11-30 மணி : வர்த்தக சங்க ஆண்டு விழா.

மாலை 5 மணி : பெரியகோட்டை; 6 மணி : மைக்கிள் பட்டணம்; 7 மணி : வேம்பத்தூர்—பள்ளித் திறப்பு விழா.

இரவு 8-30 மணி : பொதுக்கூட்டம்.

அமைச்சருடன் மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, சிவகங்கை தா. கிருஷ்ணன் எம்.பி., வட்டச் செயலாளர் பி. திருஞானசம்பந்தம் எம்.எல்.சி., பொதுக் குழு உறுப்பினர் த. சோணையா ஆகியோரும் கலந்துகொள்வர்.

# குடிசைவாழ்மக்களிடை அமைச்சர்கள்

## சுகாதாரக் குறைவான இடங்களைப் பார்வையிட்டனர்

### வீடு கட்டித்தரும் திட்டம் குறித்து ஆலோசனை

சென்னை, மே 23—

அமைச்சர்கள் செ. மாதவன், எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் மே 21-ல், தென் சென்னைக் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர்.

அடையாறு, மயிலாப்பூர் பகுதிகளில் உள்ள சேரிகளுக்குச் சென்ற அமைச்சர்கள், குடிசைவாழ் மக்களுக்குச் செய்து தரப்பட வேண்டிய சுகாதார வசதிகள் போன்றவற்றைக் குறித்து விசாரித்துத் தெரிந்துகொண்டனர்.

"சேரிப் பகுதிகள் சிலவற்றில் சுகாதார வசதிகள் மோசமானவையாக இருக்கின்றன" என்று அமைச்சர் மாதவன் தெரிவித்தார்.

வீட்டு வசதித் துறைக்குச் சொந்தமான நிலத்திலும் சில குடிசைப் பகுதிகள் உள்ளன; அப்பகுதிகளிலுள்ள மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் ஒன்று குறித்து அமைச்சர் மாதவன் ஆலோசனை செய்துவருகிருர்; அதுபற்றிச் சேரி வாழ் மக்களிடையே அவர் உரையாடினர்.

அமைச்சர்களுடன் மாநகராட்சி ஆணையரும், வீட்டு வசதி போர்டு தலைவரும் சென்றிருந்தனர்.


# தமிழக மின் குழு

## ஒப்பந்த அறிவிப்பு

ஸ்பெசிபிகேஷன் எண் C. 1047

சென்னை மின் வழங்கு ஏற்பாடு—பேசின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷன்—நான்காவது கட்ட விஸ்தரிப்பு—நிலக்கரியைப் பயன்படுத்தும் நிலையத்திற்கும் சாம்பல் கொட்டுவதற்குமான கட்டடத்துக்கு ஆர்.சி.சி. பைல் பவுண்டேஷன் அமைத்தல்—ஸ்பெசிபிகேஷன் எண் சி. 1047.

தமிழக மின் குழுவுக்காகவும் அதன் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ளபடி, மேலுறையில் குறிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகலுடன் கீழே கையெழுத்திட்டுள்ளவரால் 1968 ஜூலை 3-ஆம் நாள் புதன்கிழமை பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 2-30 மணிக்கு, நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வரை படங்களுடனும், பிற ஒப்பந்த நிபந்தனைகளுடனும் சி. 1047 என்னுள்ள ஸ்பெசிபிகேஷன் பிரதிகளை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒரு பிரதிக்கு விலையாக ரூ. 50-ம் (ரூபாய் ஐம்பது மட்டும்) விற்பனை வரியாக 3 சதவிகிதம் அதாவது ரூ. 1·50-ம் மணியார்டராகவோ ரொக்கமாகவோ 'அக்கௌண்ட்ஸ் ஆபீசர், மெட்ராஸ் எலக்ட்ரிக் சிஸ்டம் (விநியோகப் பகுதி), 157, மவுண்ட் ரோடு, சென்னை-2' என்ற முகவரியில் செலுத்தி அதற்கான இரசீதையும் இணைத்திட வேண்டும். அக்கௌண்ட்ஸ் ஆபீசரிடம் பணம் செலுத்தும்போது ஸ்பெசிபிகேஷன் எண் சி. 1047 என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இந்தத் தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்பட மாட்டாது.

எந்த ஓர் ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் கூருமல் ரத்து செய்யும் அதிகாரம் மின் குழுவுக்கு உண்டு.

மேற்பார்வைப் பொறியர்,
தொழில் நுணுக்கப் பிரிவு,
(சிவில்)

157, மவுண்ட் ரோடு,
சென்னை-2


# நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

## 24--5--68

**குளித்தலை**

சட்டமன்ற உறுப்பினர் மா. கந்தசாமி பி.ஏ.,பி.எல். அவர்களுக்குக் கார் பரிசளிப்பு விழா; மாலை 7 மணிக்கு திரு.வி.க. திடலில்; தலைவர்: அன்பில் தர்மலிங்கம்; கார் வழங்குபவர்: அமைச்சர் மு. கருணாநிதி; பேசுவோர்: து.ப. அழகமுத்து எம்.எல்.ஏ., எம். மைனர் மோசஸ் பி.ஏ., பி.எல்., பெ. சௌந்திரபாண்டியன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

## 25--5--68

**மாயூரம்**

வட்ட–நகர தி.மு.க. சார்பில் கோ.சி. மணி எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு; மாலை 7 மணிக்கு இராஜா தோட்டத்தில்; தலைவர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, மன்னை ப. நாராயணசாமி, எஸ். கணேசன் எம்.எல்.ஏ., கா. சுப்ரவேலு எம்.பி., பி.டி. இராசன், பி. கிருஷ்ணமூர்த்தி (மாலை 6 மணிக்கு நகராட்சி மன்றத்தில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.)

**மதுரை**

10-வது வட்ட தி.மு.க. துவக்க விழா; மாலை 7 மணிக்கு முனிச்சாலை ரோடு இஸ்மாயில்புரம் 12-ம் தெருவில்; தலைவர்: வ, கோ. காவேரி; பேசுவோர்: ஆ. அண்ணாமலை, எழில்விழியன், கே. கருப்பையா, ஏ.எஸ். கலைநேசன், கே. தாவூது, கா. தர்மர்.

**ஆலந்தூர்**

கோ.சு. மணி நினைவு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு சுப்பிரமணியசாமி கோயில் தெருவில்; தலைவர்: ஜி. அருணாசலம்; பேசுவோர்: இரா. சனர்த்தனம், எஸ். பாலன், நடிகர் வசந்தகுமார், இர. கோதண்டராமன், ஆர்.எஸ். பாரதி, ஏ. கருணாகரன்.